முருகப்பெருமான் துணை

**மகான் கருவூர் தேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.01.2024,** புதன்கிழமை

1. ஆறுமுகப்பெருமான் சக்தியாக
அண்ணலாக வந்த அரங்கனே
மாறுதலை கலியினில் தருவேனென
மாதவசியாக வந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சோபகிருது சிலைதிங்கள்
ஆசிபட இருபானை திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 25 ம் நாள், 10.01.2024, புதன்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை கருவூர் தேவர் யானும்
அருளுவேன் உலக நலம் காண
ஆசிதந்து ஆறுமுகனார் பலமுடன்
அரங்கன் சேவை ஆற்றிவர
4. வருகவே அரங்கன் அவதார
வல்லமைதனை வானவர்கள் அறிந்து
ஆறுதல் தந்து அரங்கனுடன் இருக்க
அனுகி கலியுக மக்கள் தானும்
5. தானும் தீட்சைதனை அடைந்து
தவசியே என திருவடி பணிந்து
ஞானம் தா எனத் தொடர
நம்பிக்கை வைத்து வருதலுற
6. வருகவே அரங்கன் பலம் தனை
வரமாக மக்களெல்லாம் பெற்று
முருகப்பெருமான் காட்சியும்
முழுமையான ஞான பலம் கூடி

7. கூடியே அவரவர் தேடும் வழி
குருபரன் ஆசி அருள் பலம்
நாடியே ஞானிகள் ஆகின்ற
நல்வாய்ப்பு யாவருக்கும் கிட்டும்
8. கிட்டவே கலிநாதன் செய்கின்ற
கெட்டவைகள் யாவும் விலகி
கட்டம் தரும் மனிதர்கள் ஆட்சி
களவு கயமை நிறைந்த ஆளுமை
9. ஆளுமை தானும் முடிவு கண்டு
அகிலத்தில் அரங்கன் வந்த
வலுவான அவதார நோக்கமாக
வழங்குவேன் ஞான ஆட்சிமலரும்
10. மலரவே இயற்கை பாதுகாப்பு
மரணமிலா பெருவாழ்வாகவே
வளரும் மக்களுக்கு பாதுகாப்பு
வருங்காலம் ஞானத் தலைமை கண்டு
11. கண்டுமே ஞான ஆட்சி சடுதியில்
கலியுகம் கண்டு மாற்றம் பெறும்
தொண்டு வழி தொண்டர்களால் ஏற்றம்
தேசமதும் கண்டு ஏற்றம் பெறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–